தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1973 பிப்ரவரி 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர்கள் திரு. எம். சடையன், திருமதி வி. லெட்சுமி அம்மாள், திரு. டி. எஸ். அருணாசலம் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மல்லப்புரம் ஒதுக்கப் பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. எம். சடையன் அவர்கள் 18—12—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் ;

சேரன்மாதேவி பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1937-ம் ஆண்டிலிருந்து 1939-ம் ஆண்டு வரையிலும், பின் 1946-ம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டு வரையிலும் உறுப்பின ராக இருந்த திருமதி வி. லெட்சுமி அம்மாள் அவர்கள் 25—1—73-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் ;

திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம் நகரங்களின் பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப்பேரவையில் 1946-ம் ஆண்டிலிருந்து 1952-ம் ஆண்டு வரை உறுப்பினராகவும், பின் 1957-ம் ஆண்டி லிருந்து 1972-ம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பின ராகவும் இருந்த திரு. டி. எஸ். அருணாசலம் அவர்கள் 28—1—'73-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்.

இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

2. இரங்கல் தீர்மானங்கள்.

திரு. இராஜாஜி அவர்கள் மறைவு குறித்தும், உறுப்பினர் திரு. பி. கோபால் அவர்கள் மறைவு குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நமது நாட்டின் தலைசிறந்த மூத்த தலைவர்களுள் ஒருவராய் விளங்கிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 25—12—1972-ம் நாளன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரின் மறைவுக்கு பேரவையின் இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவிக்கும் இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மேலும், கோயம்புத்தூர் மேற்குத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971-ம் ஆண்டு முதல் இப்பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. பி. கோபால் அவர்கள் 28—12—72-ம் நாளன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரின் மறைவுக்கு பேரவையின் இரங்கலைத் தெரிவிக்கும் தீர்மானத்தை பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

" இந்திய நாட்டின் தலைசிறந்த மூத்த தலைவர்களுள் ஒருவராய், அரசியல் அறிஞராய், எதையும் ஆழ்ந்து சிந்திக்கும் தன்மை பெற்றவராய், சிறந்த நிர்வாகத் திறன் பெற்றவராய் விளங்கியவரும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா